**தலைப்பு 334 - பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற நிருவாகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மீளாய்வாண்டில் ஸ்தாபிக்கப்பட்ட புதிய திணைக்களம் என்பதனால் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டிற்காகத் தயாரிக்கும் தேவைப்பாடு இருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை

அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 06 ஆம் இலக்க வழிகாட்டிகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தேவைப்பாட்டினை மீறிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 10-1 ஆம் பந்தியின் கீழ் நிதிக்கூற்றினைத் தயாரிப்பது தொடர்பான வழிகாட்டிகள் மற்றும் மாதிரிப் படிவத்தின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் திறைசேரி கணக்குகள் கூற்றானது பின்னிணைப்பாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் SA 80 மற்றும் SA 92 மாதிரிப் படிவங்கள் அவ்வாறு உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான இறுதி திறைசேரி கணக்கு கூற்றுக்களானது பின்னிணைப்பாக SA 80 மற்றும் SA 92 மாதிரிப் படிவங்கள் உள்ளடக்கப்பட்டிருக்காத தனால் முறையே பின்னிணைப்பு 01 மற்றும் பின்னிணைப்பு 02 ஆக மேற்கூறிய மாதிரிப் படிவங்களை தேவையான நடவடிக்கைகளுக்காக இதனுடன் சமர்ப்பிக்கின்றேன். | 2/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் (SA 92) பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,330,234 தொகையான மீதி காட்டப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறான பொறுப்பு காட்டப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தினால் ரூபா 363,035 தொகையான பொறுப்புக்கள் காட்டப்பட்டிருந்த போதிலும் திறைசேரி அப்பொறுப்புக்களை காட்டியிருக்கவில்லை. இந்த இணக்கமின்மை சம்பந்தமாக 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழுள்ள 06 ஆம் இலக்க வழிகாட்டியின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பு இலக்கம் (iii) இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிகாஸ் முறைமையிலுள்ள குறைபாட்டினால் பொறுப்புக்களை உள்ளடக்குவதற்குத் தவறியமையின் காரணமாக இந்நிலைமை உருவாகியுள்ளது. | 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்களானது பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் ரூபா 55,712 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | தவறுதலாக பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | பொறுப்புக்கள் சரியாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணங்கள் பீ கணக்கானது 2021 மே 05 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரித்த உச்ச அளவு வரவு மீதி எல்லையானது ரூபா 30,000,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் நடுப்பகுதியில் உள்ளபடியான மீதி ரூபா 38,930,765 ஆக இருந்ததனால் ரூபா 8,930,765 ஆல் இறுதி வரவு மீதி எல்லை மிகைத்திருந்தது. | அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்தும் இன்று வரை கிடைத்திருக்கவில்லை. | முற்பணங்கள் “பீ” கணக்கின் எல்லை பின்பற்றப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 8,212,000,000 தொகையில் ரூபா 6,445,492,985 தொகை அல்லது 78 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. இச் சேமிப்பினுள் இரண்டு செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 5,100,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் போது அங்கீகரித்த பதவியணியினர்கள் இணைத்துக் கொள்ளப்படாமை, மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புக்களில் 34,553 மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்படுதல், மொத்த பயிற்சி செலவில் ஒரு பகுதி மாத்திரம் செலுத்தியமை என்பவற்றின் காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது எனக் காட்டப்பட்டிருந்தது. | செலவு மதிப்பீட்டினைத் தயாரித்தல் சரியாக செய்யப்படுதல் வேண்டும். |

### 2.2 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்து வைத்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நி.பி 371(2) இன் பிரகாரம் ஒரு செயற்பாட்டிற்காக ஒரு சந்தர்ப்பத்தின் போது உச்ச அளவாக ரூபா 100,000 வரை மாத்திரம் முற்பணங்கள் வழங்க முடியும் என்ற போதிலும் ஒரு செயற்பாட்டிற்காக 5 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 100,000 வீதம் ரூபா 500,000 வழங்கப்பட்டிருந்ததுடன் அச்செயற்பாட்டிற்காக அங்கீகரித்த செலவு மதிப்பீடும் இருக்கவில்லை. | ரன்டெம்பே பயிற்சி நிலையத்திற்கான 05 செயற்பாடுகளுக்காக முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 317(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட 09 திறைசேரி உண்டியல்கள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் திறைசேரி உண்டியல்களின் முதலீடு முதிர்ச்சியடைந்ததன் பின்னர் ரூபா 1,152,136,263 பணம் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் திறைசேரி உண்டியல்களை ஒப்படைக்கும் குறிக்கோளானது திணைக்களத்தின் செலவுத் தேவைப்பாட்டிற்காகப் பயன்படுத்துதல் அல்லது மீள் முதலீடு செய்தல் ஆகிய செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லைல. | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் TO/BE2/05/MPDTF/2020 ஆம் இலக்க 2020/08/04 ஆந் திகதிய கடிதம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதி உத்தியோகத்தரின் MOD/FIN/06/02/11 ஆம் இலக்க 2020/09/03 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் மேற்கூறிய திறைசேரி உண்டியல்களின் முதலீடு முதிர்ச்சியடைந்ததன் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுமதி திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திறைசேரி உண்டியல்களை இத்திணைக்களத்திற்கு ஒப்படைக்கும் குறிக்கோளானது திணைக்களத்தின் செலவுத் தேவைப்பாட்டிற்காக பயன்படுத்துவதாகும். பாதீட்டு மதிப்பீடுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கவும் தேவைப்பாடுகளின் முன்னுரிமையின் அடிப்படையிலும் திறைசேரியிடமிருந்து கட்டுநிதியாக வேண்டுதல் செய்யப்படும். திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் TOD/BE2/05/MPDTF/2020 ஆம் இலக்க 2020.03.05 ஆந் திகதிய இலங்கை வங்கி தலைமையகத்தின் | எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கணக்காளர், சர்வதேச திறைசேரி முதலீட்டாளருக்கு விலாசமிடப்பட்ட கடிதத்தின் பின்னிணைப்பு 01 இல் குறிப்பிட்ட 09 திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சியடையும் போது ரூபா 1,147,851,094 ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் அத்திறைசேரி உண்டியல்கள் தேறப்பட்டதனால் உள்ளபடியாக திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ள பணம் ரூபா 1,152,136,263 ஆகும். இந்த வித்தியாசத்திற்காக பிரதானமாக 2 விடயங்கள் காரணமாக இருந்தன. பின்னிணைப்பு 01 இல் திறைசேரி உண்டியல்களை வழங்கும் போது செலுத்துவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டிருந்த வட்டி விகிதம் மாற்றமடைதல், 2019.02.01 ஆந் திகதி முதலீடு செய்யப்பட்ட ரூபா 47,006,135.24 தொகையான திறைசேரி உண்டியல் பின்னிணைப்பில் குறிப்பிட்டவாறு முதிர்ச்சியடையும் திகதி 2020.01.31 ஆந் திகதியாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் அப்போது இத்திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டிருக்காத தனால் மீள் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க அத் திகதியில் உள்ளவாறான முகப் பெறுமதியானது மீள் முதலீட்டிலிருந்து 2021.01.29 ஆந் திகதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட வட்டியும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை.

**3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2021 ஏப்ரல் மாதம் வரை நி.பி 756 இன் பிரகாரம் திணைக்களத்தில் வருடாந்த பொருள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | பொருள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. | 01/2020 ஆம் இலக்க 20.08.28 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பந்தியின் பிரகாரம் பொருள் பெறுகைகளானது சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் (Shopping Method) கீழ் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் தரப்பட்டுள்ள எல்லைகளின் கீழ் ஒவ்வொரு பெறுகை மட்டமும் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அப்பெறுகை எல்லைகளை மிகைத்து அரச வணிக கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 41,096,956 பெறுமதியான நடைமுறையற்ற சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | 331 பிரதேச செயலகங்களுக்காகவும் 25 மாவட்ட செயலகங்களுக்காகவும் 09 மாகாண அலுலவலகங்களுக்காகவும் விரைவாக அலுவலக உபகரணங்களை வழங்க வேண்டியிருந்ததனால் நேரடிக் கொள்வனவில் கீழ் உரிய கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டிக் கோவைகளுக்கு இணங்க நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) திணைக்களம் ACA-6 நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பெறுமதி ரூபா 50,025,209 ஆக இருந்த போதிலும் திறைசேரி SA80 அறிக்கையின் பெறுமதி ரூபா 35,684,297 ஆகும். இந்த இணக்கமற்ற மீதி சம்பந்தமாக 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தி மற்றும் 06 ஆம் இலக்க வழிகாட்டிக் கோவையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப மீதி ரூபா 14,340,906 தொகை உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | நிதியற்ற சொத்துக்களின் பெறுமதியை சரியாக பதிவு செய்தல் வேண்டும். |
| (ஆ) பலநோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தை ஆரம்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் அக்கட்டிடத்தில் காணப்பட்ட அலுவலகத்தில் இருந்த 22 பதிவேட்டுப் பொருட்கள் எழுத்து மூலம் ஒப்படைக்கப்படாது அல்லது எதுவித மூலங்களுமின்றி பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை முறையாக ஒப்படைக்கப்படாமை அல்லது எழுத்து மூலம் ஒப்படைக்கப்படாமையினால் பணிப்பாளர் நாயகத்தின் எழுத்துமூல அங்கீகாரத்தின் அடிப்படையில் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டது. | எழுத்து மூலம் ஒப்படைத்தலின் அடிப்படையில் பொருள் இருப்பு பதிவேட்டில் பதிதல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரித்த பதவியணியினரில் 23 சதவீதம் வெற்றிடமாகக் காணப்பட்டதன் அடிப்படையில் திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வது தடையாகக் காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | தற்பொழுது காணப்படுகின்ற பதவியணி யினர்களின் மூலம் திணைக்களத்தின் செயலாற்றலைப் பேணுவதற்கு முடியுமாக விருந்தால் அங்கீகரித்த பதவியணியினைத் திருத்தம் செய்வதற்கும் அவ்வாறு இல்லையாயின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் பிரேரணை செய்யப்படுகின்றது. |
| (ஆ) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்களின் 20 பதவிகளில் 15 பதவிகளும் முகாமைத்துவ சேவைகளின் 30 பதவிகளில் 23 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. திணைக்களத்தின் நாளாந்த கடமைகளுக்கு இது தடையாக இருக்கலாம் என அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | - மேற்படி |
| (இ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் குறிப்பிட்ட பின்னிணைப்பு 02 படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்கான மனித வளங்கள் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2018-01-24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்காக மனித வளங்கள் திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதுடன் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும். |